**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.84/2022
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : மங்களேஸ்வரன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of September 2023.

22.09.2023

(எதிரிகள் 1 முதல் 5 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் பேரையூர் கூட்டுறவு வங்கியில் உதவி செயாளராக பணியாற்றி வருகிறேன். அசா.1 வினோத்யை தெரியும். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். கடந்த 17.11.2018ம் தேதி பேராயர் தேர்தல் சம்மந்தமாக கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது அசா.1 வினோத் தேவையில்லாத நபர்கள் கூட்டத்திற்குள் வரக்கூடாது என்று கூறினார். அதற்கு நாங்கள் வரத்தான் செய்வோம் என்று 5ம் எதிரி ஆனந்தராஜ், 1ம் எதிரி கருப்பையா, 2ம் எதிரி வேலவன் ஆகியோர் வந்து தகராறு செய்தார்கள். அப்போது கைகலப்பு ஏற்பட்டது.

2) அந்த சமயத்தில் அசா.1க்கு தலையில் காயம் ஏற்பட்டது. நான் உடனே முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் மனுவின்பேரில் ஆஜர் இல்லை. கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.84/2022
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : ஆசிர்வாதம் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of September 2023.

22.09.2023

(எதிரிகள் 1 முதல் 5 ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் TELC கிறிஸ்துவ ஆலயத்தில் பணியாற்றி வருகிறேன். அசா.1 வினோத்யை தெரியும். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். சுமார் 4 வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை, 04.30 மணியளவில் பேராயர் தேர்தல் சம்மந்தமாக கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது 5ம் எதிரி ஆனந்தராஜ், 2ம் எதிரி வேலவன், 4ம் எதிரி ஜெபராணி, 3ம் எதிரி சுரேஷ்மாணிக்கம் ஆகியோர் அசா.1 வினோத்யை அடித்தார்கள். அதில் அசா.1 வினோத்திற்கு நெற்றில் காயம் ஏற்பட்டது. நான் சண்டையை விலக்கிவிட்டு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் மனுவின்பேரில் ஆஜர் இல்லை. கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது

குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டது.